# அழகியற் கல்வி
# நடனம்

## பாடத்திட்டம்

### கல்விப் பொதுத் தராதரப் பத்திரம் (உயர்தரம்)
### 12 ஆம் 13 ஆந் தரங்கள்

(2017 ஆம் ஆண்டிலிருந்து அமுல்படுத்துவதற்கானது)

அழகியற் கல்வித்துறை
மொழிகள், மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞானங்கள் பீடம்
தேசிய கல்வி நிறுவகம்
மஹரகம

www.nie.lk

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1.0 | அறிமுகம் | i |
| 2.0 | பொது தேசிய இலக்குகள் | ii |
| 3.0 | அடிப்படைத் தேர்ச்சிகள் | iii - iv |
| 4.0 | அழகியற் கல்வி நடன பாடக் குறிக்கோள்கள் | v |
| 5.0 | பொது தேசிய குறிக்கோள்களுக்கும் நடனப்பாட குறிக்கோள்களுக்கும் இடைப்பட்ட தொடர்பைக்காட்டுதல். | vi |
| 6.0 | தேர்ச்சி, தேர்ச்சி மட்டம், பாட உள்ளடக்கம், கற்றற்பேறு, பாடவேளைகள் | 1 - 24 |
| 7.0 | நடன பாடத்தை கற்றல் - கற்பித்தல் முறைகள் | 25 |
| 8.0 | பாடசாலைக் கொள்கைகளும் செயற்றிட்டங்களும் | 26 |
| 9.0 | மதிப்பீடும் கணிப்பீடும் | 27 |
| 10.0 | பாடத்திட்ட அமைப்புக் குழு | 28 |

# 1.0 அறிமுகம்

புதிய சகத்திரத்தில் அறிமுகஞ் செய்யப்பட்ட தேர்ச்சிகளை அடிப்படையாகவும் செயற்பாடுகளை முதன்மையாகவும் கொண்ட கல்வி மறுசீரமைப்பு வட்டத்தின் இரண்டாம் கட்டம் 2015 ஆம் ஆண்டு முதல் நடைமுறைக்கு வந்துள்ளது. புதிய கல்வி மறுசீரமைப்புச் செயன்முறையின் கீழ் தர்க்கிப்புக்கு உட்படுத்தப்பட்ட பாடத்திட்டங்களின் முதன்மையான குறிக்கோள், பாடசாலைச் சூழலில் வளரும் மாணவர் சந்ததியை அறிவு, திறன், மனப்பாங்கு, நல்ல வாழ்க்கைப் பழக்கங்கள், மற்றும் உயரிய இரசனையுணர்வு கொண்ட மனித நேயச் சிந்தனையான தனியாள் என்ற வகையில் செயலூக்கமும் வேலையுலகுக்குத் தேவையான தேர்ச்சிகளையும் கொண்ட மனித வளமாக வளர்த்தெடுப்பதும் இக்குறிக்கோளை அடைவதற்குப் பங்களிப்புச் செய்வதும் கல்விச் செயன்முறையில் ஈடுபாடுடைய ஒவ்வொருவரதும் பொறுப்பாகும்.

கல்விப் பொதுத் தராதர உயர்தர 12 ஆம் 13 ஆந் தரப் புதிய பாடத்திட்டங்களைத் திட்டமிடும்போது மேற்படி விடயமும், நடனக் கல்வியின் குறிக்கோள்களும், பாடத்தின் சிறப்பியல்புகளும் கவனத்திற்கொள்ளப்பட்டன. சுதேச பண்பாட்டு விழுமியத் தொகுதிகளை இனங்காணல், மதித்தல், பாதுகாத்தல் மற்றும் பேணி வருதலோடு கூடவே ஏனைய பண்பாடுகளின் இயல்புகளை இனங்காணல், மதித்தல் மற்றும் சருவதேச மட்டத்தில் சளைக்காது செயற்படுதலுக்குத் தேவையான பாட விடய அறிவையும் தனியாள்களின் ஆற்றல்களையும் வளர்ப்பதே இப்பாடத்திட்டத்தினால் எதிர்பார்க்கப்படுகின்றது.

நடன பாடத்துடன் இணைந்த பரந்துபட்ட ஏழு (07) குறிக்கோள்களை அடிப்படையாகக் கொண்டு எட்டு (08) தேர்ச்சிகளின் வழியே இப்புதிய பாடத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. அவற்றுள் 12 ஆந் தரத்தில் 35 தேரத்ச்சி மட்டங்களின் கீழும் 13 ஆந் தரத்தில் 25 தேர்ச்சி மட்டங்களின் கீழும் பாடவிடயங்கள் தொகுக்கப்பட்டுள்ளன. 2017 ஆம் ஆண்டில் இருந்து அமுலுக்கு வரும் இப்பாடவிதானத்தின் விரிவாக்கம் ஆசிரியர் வழிகாட்டியில் குறிப்பிடுவதற்குரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

# 2.0 தேசிய இலக்குகள்

1. மனித கௌரவத்தைக் கண்ணியப்படுத்தல் எனும் எண்ணக்கருவுக்குள் தேசியப்பிணைப்பு, தேசிய முழுமை, தேசிய ஒற்றுமை, இணக்கம், சமாதானம் என்பவற்றை மேம்படுத்தல் மூலமும், இலங்கைப் பன்மைச் சமூகத்தின் கலாசார வேறுபாட்டினை அங்கீகரித்தல் மூலமும் தேசத்தைக் கட்டி எழுப்புதலும் இலங்கையர் எனும் அடையாளத்தை ஏற்படுத்தலும்.

2. மாற்றமுறும் உலகத்தின் சவால்களுக்குத் தக்கவாறு முகங்கொடுத்தலோடு தேசிய பாரம்பரியத்தின் அதி சிறந்த அம்சங்களை அங்கீகரித்தலும் பேணுதலும்.

3. மனித உரிமைகளுக்கு மதிப்பளித்தல், கடமைகள், கட்டுப்பாடுகள் பற்றிய விழிப்புணர்வு, ஒருவர் மீது ஒருவர் கொண்டுள்ள ஆழ்ந்த, இடையறாத அக்கறையுணர்வு, என்பவற்றை மேம்படுத்தும் சமூக நீதியும் ஜனநாயக வாழ்க்கைமுறை நியமங்களும் உள்ளடங்கிய சுற்றாடலை உருவாக்குதலும் ஆதரித்தலும்.

4.. ஒருவரது உள, உடல் நலனையும் மனித விழுமியங்களுக்கு மதிப்பளிப்பதை அடிப்படையாகக் கொண்ட நிலைபேறுடைய வாழ்க்கைக் கோலத்தையும் மேம்படுத்தல்

5. நன்கு ஒன்றிணைக்கப்பட்ட சமநிலை ஆளுமைக்குரிய ஆக்க சிந்தனை, தற்றுணிபு, ஆய்ந்து சிந்தித்தல், பொறுப்பு, வகைகூறல் மற்றும் உடன்பாடான அம்சங்களை விருத்தி செய்தல்.

6. தனிநபரதும் தேசத்தினதும் வாழ்க்கைத் தரத்தைப் போஷிக்கக் கூடியதும் இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிக்கக் கூடியதுமான ஆக்கப் பணிகளுக்கான கல்வியூட்டுவதன் மூலம் மனிதவள அபிவிருத்தியை ஏற்படுத்தல்.

7. தனிநபர்களின் மாற்றத்திற்கு ஏற்ப இணங்கி வாழவும், மாற்றத்தை முகாமை செய்யவும் தயார்ப்படுத்தவும் விரைவாக மாறிவரும் உலகில் சிக்கலானதும், எதிர்பாராததுமான நிலைமைகளைச் சமாளிக்கும் தகைமையை விருத்தி செய்தல்.

8. நீதி, சமத்துவம், பரஸ்பர மரியாதை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு சர்வதேச சமுதாயத்தில் கௌரவமானதோர் இடத்தைப் பெறுவதற்குப் பங்களிக்கக் கூடிய மனப்பாங்குகளையும் திறன்களையும் வளர்த்தல்.

(தேசிய கல்வி ஆணைக்குழுவின் அறிக்கை - 2003)

# 3.0 அடிப்படைப் பொதுத் தேர்ச்சிகள்

கல்வியினூடாக விருத்தி செய்யப்படும் பின்வரும் அடிப்படைத் தேர்ச்சிகள் மேற்குறித்த தேசிய இலக்குகளை அடைவதற்கு வழிவகுக்கும்.

**1. தொடர்பாடல் தேர்ச்சிகள்**

தொடர்பாடல் பற்றிய தேர்ச்சிகள் நான்கு துணைத் தொகுதிகளை அடிப்படையாகக் கொண்டவை. எழுத்தறிவு, எண்ணறிவு, சித்திர அறிவு, தகவல் தொழினுட்பத் தகைமை.

எழுத்தறிவு : கவனமாகச் செவிமடுத்தல், தெளிவாகப் பேசுதல், கருத்தறிய வாசித்தல், சரியாகவும், செம்மையாகவும் எழுதுதல், பயன்தரு வகையான கருத்துப் பரிமாற்றம்.

எண்ணறிவு : பொருள், இடம், காலம் என்பவற்றுக்கு எண்களைப்பயன்படுத்தல், எண்ணுதல், கணித்தல், ஒழுங்கு முறையாக அளத்தல்.

சித்திர அறிவு : கோடு, உருவம் என்பவற்றின் கருமத்தை அறிதல், விவரங்கள், அறிவுறுத்தல்கள்,எண்ணங்கள் ஆகியவற்றைக் கோடு, உருவம், வர்ணம் என்பவற்றால் வெளிப்படுத்தலும் பதிவு செய்தலும்.

தகவல் தொழினுட்பத் தகைமை: கணினி அறிவு, கற்றலில், தொழிலில் சுற்றாடலில், சொந்த வாழ்வில் தகவல் தொடர்பாடல் தொழினுட்பங்களைப் (ICT) பயன்படுத்தல்.

**2. ஆளுமை விருத்தி தொடர்பான தேர்ச்சிகள்**

- ஆக்கம், விரிந்த சிந்தனை, தற்றுணிபு, தீர்மானம் எடுத்தல், பிரச்சினை விடுவித்தல், நுணுக்கமான மற்றும் பகுப்பாய்வுச் சிந்தனை, அணியினராகப் பணி செய்தல், தனியாள் இடைவினைத் தொடர்புகள், கண்டு பிடித்தலும் கண்டறிதலும் முதலான திறமைகள்.
- நேர்மை, சகிப்புத்தன்மை, மனித கௌரவத்தைக் கண்ணியப்படுத்தல் ஆகிய விழுமியங்கள்
- மன எழுச்சி, நுண்ணறிவு.

**3. சூழல் தொடர்பான தேர்ச்சிகள்**

இத்தேர்ச்சிகள் சூழலோடு தொடர்புறுகின்றன. சமூகம், உயிரியல், பௌதிகம்

சமூகச் சூழல்: தேசிய பாரம்பரியம் பற்றிய விழிப்புணர்வு, பன்மைச் சமூகத்தின் அங்கத்தவர்கள் என்ற வகையில் தொடர்புறும் நுண்ணுணர்வும் திறன்களும், பகிர்ந்தளிக்கப்படும் நீதி, சமூகத் தொடர்புகள், தனிநபர் நடத்தைகள், பொதுவானதும் சட்டபூர்வமானதுமான சம்பிரதாயங்கள், உரிமைகள், பொறுப்புக்கள், கடமைகள், கடப்பாடுகள் என்பவற்றில் அக்கறையும்.

உயிரியல் சூழல்: வாழும் உலகு, மக்கள், உயிரியல், சூழல் தொகுதி - மரங்கள், காடுகள், கடல், நீர், வளி, உயிரின தாவரம், விலங்கு, மனித வாழ்வு.

பௌதிகச் சூழல்: இடம், சக்தி, எரிபொருள், சடப்பொருள், பொருள்கள் பற்றியும் அவை மனித வாழ்க்கை, உணவு, உடை, உறையுள், சுகாதாரம், சௌகரியம், சுவாசம், நித்திரை, இளைப்பாறுதல், ஓய்வு, கழிவுகள், உயிரின கழிவுப் பொருட்கள் ஆகியவற்றுடன் கொண்டுள்ள தொடர்பு பற்றிய விழிப்புணர்வும், நுண்ணுணர்வுத் திறன்களும் கற்றலுக்கும் வேலை செய்வதற்கும், வாழ்வதற்கும் கருவிகளையும் தொழினுட்பங்களையும் பயன்படுத்தும் திறன்களும் இங்கு உள்ளடக்கப்பட்டுள்ளன.

**4. வேலை உலகத்திற்குத் தயார் செய்தல் தொடர்பான தேர்ச்சிகள்**

அவர்களது சக்தியை உச்ச நிலைக்குக் கொண்டு வருவதற்கும் அவர்களது ஆற்றலைப் போஷிப்பதற்கும் வேண்டிய தொழில்சார் திறன்கள்.

பொருளாதார விருத்திக்குப் பங்களித்தல்.

அவர்களது தொழில் விருப்புகளையும் உளச்சார்புகளையும் கண்டறிதல்

அவர்களது ஆற்றல்களுக்குப் பொருத்தமான வேலையைத் தெரிவு செய்தல்

பயனளிக்கக் கூடியதும் நிலைபேறுடையதுமான ஜீவனோபாயத்தில் ஈடுபடல்.

**5. சமயமும் ஒழுகலாறும் தொடர்பான தேர்ச்சிகள்**

அன்றாட வாழ்க்கையில் மிகப் பொருத்தமானவற்றைத் தெரிவு செய்யவும், நாளாந்த வாழ்க்கையில் ஒழுக்கநெறி, அறநெறி, சமயநெறி தொடர்பான நடத்தைகளைப் பொருத்தமுற மேற்கொள்ளவும் விழுமியங்களைத் தன்மயமாக்கிக் கொள்ளலும் உள்வாங்கலும்.

**6. ஓய்வு நேரத்தைப் பயன்படுத்தல், விளையாட்டு பற்றிய தேர்ச்சிகள்**

அழகியற் கலைகள், இலக்கியம், விளையாட்டு, மெய்வல்லுநர் போட்டிகள், ஓய்வு நேரப் பொழுதுபோக்குகள் மற்றும் வாழ்வின் ஆக்கபூர்வச் செயற்பாடுகள் மூலம் வெளிப்படுத்தப்படும் இன்ப நுகர்ச்சி, மகிழ்ச்சி, மனவெழுச்சிகள் இவை போன்ற மனித அனுபவங்கள்.

**7. "கற்றலுக்குக் கற்றல்" தொடர்பான தேர்ச்சிகள்**

விரைவாக மாறுகின்ற, சிக்கலான, ஒருவரில் ஒருவர் தங்கி நிற்கின்ற உலகொன்றில் ஒருவர் சுயாதீனமாகக் கற்பதற்கான வலிமையளித்தலும் மாற்றியமைக்கும் செயன்முறை ஊடாக மாற்றத்திற்கேற்ப இயங்கவும் அதனை முகாமை செய்யவும் வேண்டிய உணர்வையும் வெற்றியையும் பெறச் செய்தல்.

(தேசிய கல்வி ஆணைக்குழுவின் அறிக்கை - 2003)

# 4.0 அழகியற் கல்வி - நடன பாடத்தின் குறிக்கோள்கள்

01. இலங்கையின் பன்மைப் பண்பாட்டுப் பல்வகைமையை நடன பாடத்துடன் தொடர்புடைய செயற்பாடுகளின் வழியே இனங்கண்டு, தேசிய ஒற்றுமை, ஒருமைப்பாடு, சமாதானம் ஆகியவற்றை முன்னெடுப்பதற்காகச் செயற்படுதவற்கான மனித வளத்தை மேம்படுத்தல்.

02. எதிர்கால வேலையுலகின் அறைகூவல்களை வெற்றிகரமாக எதிர்கொள்ளத்தக்க, செயலூக்கமுள்ள நடன பாடத்துடன் தொடர்புடைய தேசிய பண்பாட்டு மரபுரிமைகளை இனங்காண்பதற்கும், பாதுகாப்பதற்குமாக தனியாளின் ஆற்றல்களை வளர்த்தல்.

03. விளைதிறனான கருமங்களைச் செய்வதற்குத் தேவையானதான தொடங்காற்றல், படைப்பாற்றல், தருக்கரீதியான பகுத்தறிவு ரீதியான சிந்தனை, உயரிய இரசனையுணர்வு ஆகியவற்றைக் கொண்ட நன்கு இசைவாக்கமடைந்த சமநிலையான ஆளுமையை விருத்தி செய்வதற்காக, நடனக்கல்விச் செயற்பாடுகளின் வழியே அறிவு திறன், மனப்பாங்கை விருத்தி செய்தல்.

04. வெற்றிகரமான வாழ்க்கை நடத்துவதற்குத் தேவையான உடல், உள நலன் விருத்திக்கும் பேண்தகு வாழ்க்கை முறையொன்றுக்காகவும் நடன பாடத்துடன் தொடர்புடைய செயற்பாடுகளைத் துணையாகக் கொண்டும் திறனை வளர்த்தல்.

05. நடன பாடத்துடன் தொடர்புடைய செய்முறைச் செயற்பாடுகளின் வழியே இலங்கைப் பண்பாட்டு மற்றும் பொருளாதார வளர்ச்சியில் பங்களிப்புச் செய்வதற்குத் தேவையான தனிப்பட்ட திறன்களையும் சமூகத்திறன்களையும் விருத்தி செய்தல்.

06. சூழலை அவதானித்துப்பெறும் அனுபவங்களைத் துணையாகக் கொண்டு, உயிரிய தரமுள்ள கலைப்படைப்புகளை ஆக்குவதோடு, துரிதமாக மாறிவரும் உலகில் நிகழும் சிக்கார்ந்த, எதிர்பாராத மாற்றங்களை வெற்றிகரமாக எதிர்கொள்வதற்கும் பல்வேறு பிரச்சினைகளை ஆக்கபூர்வமாகத் தீர்த்துக்கொள்வதற்கும் தேவையான சிந்தனை சக்தியையும் ஆக்கியல் திறன்களையும் வளர்த்தல்.

07. சருவதேச சமூகத்தினரிடையே இலங்கையர் எனும் தனித்துவத்தை வெளிக்காட்டி, கௌரவமானதோர் இடத்தைப் பெறுவதற்காக நடனக்கல்வியின் மூலம் திறன்களையும் மனப்பாங்குகளையும் வழங்கி, நல்லொழுக்க, சகவாழ்வுப் பழக்கங்களைப் பேணிவருவதற்குத் துணை புரிதலும் அவற்றைப் போசித்துச் செம்மைப்படுத்துவதற்குத் தேவையான மனத வளங்களை விருத்தி செய்தலும்.

## 5.0 பொது தேசிய குறிக்கோள்களுக்கும் நடனப்பாட குறிக்கோள்களுக்கும் இடைப்பட்ட தொடர்பைக்காட்டுதல்

| தேசிய குறிக்கோள்கள் | அழகியற் கல்வி - நடன பாடத்தின் குறிக்கோள்கள் |
| --- | --- |
| 1. மனித கௌரவத்தைக் கண்ணியப்படுத்தல் எனும் எண்ணக்கருவுக்குள் தேசியப்பிணைப்பு, தேசிய முழுமை, தேசிய ஒற்றுமை, இணக்கம், சமாதானம் என்பவற்றை மேம்படுத்தல் மூலமும், இலங்கைப் பன்மைச் சமூகத்தின் கலாசார வேறுபாட்டினை அங்கீகரித்தல் மூலமும் தேசத்தைக் கட்டி எழுப்புதலும் இலங்கையர் எனும் அடையாளத்தை ஏற்படுத்தலும். | 01. இலங்கையின் பன்மைப் பண்பாட்டுப் பல்வகைமையை நடன பாடத்துடன் தொடர்புடைய செயற்பாடுகளின் வழியே இனங்கண்டு, தேசிய ஒற்றுமை, ஒருமைப்பாடு, சமாதானம் ஆகியவற்றை முன்னெடுப் பதற்காகச் செயற்படுதவற்கான மனித வளத்தை மேம்படுத்தும். |
| 2. மாற்றமுறும் உலகத்தின் சவால்களுக்குத் தக்கவாறு முகங்கொடுத்த லோடு தேசிய பாரம்பரியத்தின் அதி சிறந்த அம்சங்களை அங்கீகரித்தலும் பேணுதலும். | 02. எதிர்கால வேலையுலகின் அறைகூவல்களை வெற்றிகரமாக எதிர்கொள்ளத்தக்க, செயலூக்கமுள்ள நடன பாடத்துடன் தொடர்புடைய தேசிய பண்பாட்டு மரபுரிமைகளை இனங்காண்பதற்கும் பாதுகாப்பதற்குமாக தனியாளின் ஆற்றல்களை வளர்த்தல். |
| 3. மனித உரிமைகளுக்கு மதிப்பளித்தல், கடமைகள், கட்டுப்பாடுகள் பற்றிய விழிப்புணர்வு, ஒருவர் மீது ஒருவர் கொண்டுள்ள ஆழ்ந்த, இடையறாத அக்கறையுணர்வு, என்பவற்றை மேம்படுத்தும் சமூக நீதியும் ஜனநாயக வாழ்க்கைமுறை நியமங்களும் உள்ளடங்கிய சுற்றாடலை உருவாக்குதலும் ஆதரித்தலும். | 03. விளைதிறனான கருமங்களைச் செய்வதற்குத் தேவையானதான தொடங்காற்றல், படைப்பாற்றல், தருக்கரீதியான பகுத்தறிவு ரீதியான சிந்தனை, உயரிய இரசனையுணர்வு ஆகியவற்றைக் கொண்ட நன்கு இசைவாக்கமடைந்த சமநிலையான ஆளுமையை விருத்தி செய்வதற்காக, நடனக்கல்விச் செயற்பாடுகளின் வழியே அறிவு திறன்கள், மனப்பாங்கை விருத்தி செய்தல். |
| 4.. ஒருவரது உள, உடல் நலனையும் மனித விழுமியங்களுக்கு மதிப்பளிப்பதை அடிப்படையாகக் கொண்ட நிலைபேறுடைய வாழ்க்கைக் கோலத்தையும் மேம்படுத்தல். | 04. வெற்றிகரமான வாழ்க்கை நடத்துவதற்குத் தேவையான உடல், உள நலன் விருத்திக்கும் பேண்தகு வாழ்க்கை முறையொன்றுக் காகவும் நடன பாடத்துடன் தொடர்புடைய செயற்பாடுகளைத் துணையாகக் கொண்டும் திறனை வளர்த்தல். |
| 5. நன்கு ஒன்றிணைக்கப்பட்ட சமநிலை ஆளுமைக்குரிய ஆக்க சிந்தனை, தற்றுணிபு, ஆய்ந்து சிந்தித்தல், பொறுப்பு, வகைகூறல் மற்றும் உடன்பாடான அம்சங்களை விருத்தி செய்தல். | 05. சூழலை அவதானித்துப்பெறும் அனுபவங்களைத் துணையாகக் கொண்டு, உயிரிய தரமுள்ள கலைப்படைப்புகளை ஆக்குவதோடு, துரிதமாக மாறிவரும் உலகில் நிகழும் சிக்கார்ந்த, எதிர்பாராத மாற்றங்களை வெற்றிகரமாக எதிர்கொள்வதற்கும் பல்வேறு பிரச்சினைகளை ஆக்கபூர்வமாகத் தீர்த்துக்கொள்வதற்கும் தேவையான சிந்தனை சக்தியையும் ஆக்கியல் திறன்களையும் வளர்த்தல். |
| 6. தனிநபரதும் தேசத்தினதும் வாழ்க்கைத் தரத்தைப் போஷிக்கக் கூடியதும் இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிக்கக் கூடியதுமான ஆக்கப் பணிகளுக்கான கல்வியூட்டுவதன் மூலம் மனிதவள அபிவிருத்தியை ஏற்படுத்தல். | 06. நடன பாடத்துடன் தொடர்புடைய செய்முறைச் செயற்பாடுகளின் வழியே இலங்கைப் பண்பாட்டு மற்றும் பொருளாதார வளர்ச்சியில் பங்களிப்புச் செய்வதற்குத் தேவையான தனிப்பட்ட திறன்களையும் சமூகத்திறன்களையும் விருத்தி செய்தல். |
| 7. தனிநபர்களின் மாற்றத்திற்கு ஏற்ப இணங்கி வாழவும், மாற்றத்தை முகாமை செய்யவும் தயார்ப்படுத்தவும் விரைவாக மாறிவரும் உலகில் சிக்கலானதும், எதிர்பாராததுமான நிலைமைகளைச் சமாளிக்கும் தகைமையை விருத்தி செய்தல். | 07. சருவதேச சமூகத்தினரிடையே இலங்கையர் எனும் தனித்துவத்தை வெளிக்காட்டி, கௌரவமானதோர் இடத்தைப் பெறுவதற்காக நடனக்கல்வியின் மூலம் திறன்களையும் மனப்பாங்குகளையும் வழங்கி, நல்லொழுக்க, சகவாழ்வுப் பழக்கங்களைப் பேணிவருவதற்குத் துணை புரிதலும் அவற்றைப் போசித்துச் செம்மைப்படுத்துவதற்குத் தேவையான மனத வளங்களை விருத்தி செய்தலும். |
| 8. நீதி, சமத்துவம், பரஸ்பர மரியாதை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு சர்வதேச சமுதாயத்தில் கௌரவமானதோர் இடத்தைப் பெறுவதற்குப் பங்களிக்கக் கூடிய மனப்பாங்குகளையும் திறன்களையும் வளர்த்தல். | |

# 6.0 தேர்ச்சி, தேர்ச்சி மட்டம், பாட உள்ளடக்கம், கற்றற்பேறு, பாடவேளைகள்

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளை |
|---|---|---|---|---|
| 1.0 நடனத்துடன் தொடர்பான அடிப்படை அம்சங்களைக் கொண்டு செயன்முறைத் திறன்களை வெளிப்படுத்துவார். | 1.1 சரியான சுவடுகளுடன் அடிப்படை பாசரம்ப /சரம்ப, மண்டிபத என்பவற்றை ஆற்றுகைப் படுத்துவார். | • பாசரம்ப / மண்டி பத ஹுமார பதத்துடன் (1-12 வரை) | • அடிப்படை சுவடுகள் வெளிப் படும் வகையில் பாசரம்ப / மண்டிபத / ஹுமார பதத்துடன் முன்வைப்பார்.<br>• தாள வாத்தியத்திற்கு ஏற்ப விளம்ப லயம், மத்திய லயம், துரித லயம் என்பவற்றுக்கேற்ப பாசரம்ப / பண்டிபத என்ப வற்றை ஆற்றுகைப்படுத்துவார். | 06 |
| | | • கொடசரப / இலங்கம்சரம்ப / தொ மின பத (1-12 வரை) கஸ்திரம் / இரட்டி / ஹுமார பதத்துடன். | • பறை / தவில் வாத்தியத்துக்கு ஏற்ப விலம்ப, மத்திய, துரித லயங்களில் கொடசரம்ப / இலங்கம் சரம்ப / தொமின பத ஆற்றுகைப்படுத்துவார்.<br>• சரியான சுவடுகள் வெளிப் படும் விதத்தில் கொடசரம்ப / இலங்கம் சரம்ப /தொமின பத / கஸ்திரம் / இரட்டி என்பன ஹுமார பதங்களுடன் முன்வைப்பார். | 08 |
| | 1.2 நடன ஆற்றல்களை வெளிப் படுத்தத் தேவையான துள்ளல்களையும் சுழலுதல் களையும் உபயோகப் படுத்துவார். | • நடன ஆற்றல்கள் வெளிப்படுத்தத் தேவையான துள்ளல்கள், சுழலுதல்கள். | • பாரம்பரிய நடனங்களுடன் தொடர்புடைய துள்ளல்கள், சுழலுதல்கள் என்பவற்றை முன்வைப்பார்.<br>• ஆக்கத்திற்காக உபயோகப்படும் துள்ளல்கள், சுழலுதல்கள் என்பவற்றை வெளிப்படுத்துவார்.<br>• துள்ளல்களையும் சுழலுதல் களையும் சரியான முறைகளுக்கு இணங்க வெளிப்படுத்துவார். | 04 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளை |
|---|---|---|---|---|
| | 1.3 பாரம்பரிய இயல்புகள் வெளிப்படும் விதத்தில் வண்ணம் ஆற்றுகைப் படுத்துவார். | **வண்ணம்-மேலைத்தேய(உடரட்ட)**<br>• முசலடி, கணபதி, மயூரா | • குழுவாக இணைந்து கற்ற வண்ணங்களை வெளிப்படுத்துவார்.<br>• கற்றுக்கொண்ட வண்ணங்களை மேள வாத்தியத்திற்கேற்ப பாடிக் கொண்டு சரியான சுவடுகள் வெளிப்படும் விதத்தில் தனியாக அபிநயித்துக் காட்டுவார். | 15 |
| | | **சிந்து வண்ணம்-கீழைத்தேய**<br>• சுத்த தாளம், லலித ராக தாளம், நழுகீதிகா தாளம் | • குழுவாக இணைந்து கற்ற வண்ணங்களை வெளிப்படுத்துவார்.<br>• கற்றுக்கொண்ட சிந்து வண்ணங் களை மேள வாத்தியத்திற் கேற்ப பாடிக் கொண்டு சரியான சுவடுகள் வெளிப்படும் விதத்தில் தனியாக அபிநயித்துக் காட்டு வார். | |
| | | **வண்ணம்-மலைநாடு(சப்பிரகமுவ)**<br>• கவுலா, திஸரா, நாக கஜகா | • குழுவாக இணைந்து கற்ற வண்ணங்களை வெளிப்படுத்துவார்.<br>• கற்றுக்கொண்ட வண்ணங்களை தவில் வாத்தியத்திற்கேற்ப பாடிக் கொண்டு சரியான சுவடுகள் வெளிப்படும் விதத்தில் தனியாக அபிநயித்துக் காட்டுவார். | |
| | 1.4 ghly;pd; wpki yehl;L fPoj;Nja rgghpfKt ghukgupa eldq;fis Kd;it gghu; | **வட்டம்-மேலைத்தேய(உடரட)**<br>• குதந்த கத்தொங் வட்டமும், தொங் ஜிந்த கத்த தொந்த வட்டம் (முழுமைப் பதங்களுடன் பதங்கள் 4, கஸ்திரம் 4, அடவு 4) | • சரியான சுவடுகளுடன் பதம், கஸ்திரம், அடவு என்பவற்றை ஆற்றுகைப்படுத்துவார்.<br>• நுட்பத்திறன் வளர்ச்சிக்கு ஏதுவான 'வட்டம்' நடனத்தில் ஈடுபடுவார். | 12 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளை |
|---|---|---|---|---|
| | | | • குழுவாக இணைந்து கற்றுக் கொண்ட வட்டங்களை ஆற்றுகைப்படுத்துவார்.<br>• மேள வாத்தியத்திற்கேற்ப கற்றுக்கொண்ட வட்டங்களின் பதங்கள், கஸ்திரம், அடவு என்பவற்றைச் சரியான சுவடுகள் வெளிப்படும் விதத்தில் தனியாக அபிநயிப்பார். | |
| | | **கீழைத்தேய**<br>• குந்த கத்தி, கத்த வட்டம் (பதங்கள் 7, இரட்டி 7) | • மேள வாத்தியத்திற்கு ஏற்ப சரியான சுவடுகளுடன் குந்த கத்தி, கத்த வட்டத்தின் பதங்கள் இரட்டி என்பவற்றை ஆற்றுகைப் படுத்துவார். | |
| | | • ஒருதாளம், இரு தாளம், முத்தாளம் | • மேள வாத்தியத்திற்கேற்ப சரியான சுவடுகள், ஒருதாளம், இருதாளம், முத்தாளம் என்பவற்றை ஆற்றுகைப்படுத்து வார். | |
| | | **சப்பிரகமுவ**<br>• யக்பத மாத்திரரை, கமன் மாத்திரை (கலாசம் வட்டம், கலாசம, அடவு) | • தவில் வாத்தியத்துக்கேற்ப சரியான சுவடுகளைப் பின்பற்றி யக்பத மாத்திரை, கமன் மாத்திரை என்பவற்றை ஆற்றுகைப்படுத்துவார். | |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளை |
|---|---|---|---|---|
| | 1.5 பூஜைக்கு உபயோகிக்கப்படும் உபகரணங்களை சரியாகக் கையாண்டு 'கொத்தல பதய', 'கெண்டி பாலிய' என்பவற்றை ஆற்றுகைப்படுத்துவார். | • மலைநாட்டு - 'கொத்தல பதய'<br>• கீழைத்தேய - 'கொத்தல பதய'<br>• சபரகமுவ - 'கெண்டி பாலிய' | • பூஜை உபகரணங்களை சரியாகக்கையாண்டு கொத்தல பதய/ கெண்டி பாலிய நடன அமைப்புகளின் பாரம்பரிய இயல்புகளை வெளிப்படுத்திய வண்ணம் அவற்றை வெளிப் படுத்துவார். | 12 |
| | 1.6 ghl Yl d ; ghuk gupa k hd el d mqf qf i s Kd ; i t gghu; | **மலைநாடு (உடரட)**<br>• மங்கலம், 3 பதங்களைக்கொண்ட கஸ்திரமுடன் | • பாரம்பரிய தனித்துவம் பேணும் வகையிலான மேள வாத்தியத் துக்கேற்பப் பாடிக்கொண்டு 'மங்கலம்' என்பதை ஆற்றுகைப் படுத்துவார். | 12 |
| | | • அஸ்னே ஆரம்பப் பதங்கள் 3 உடன் (ஓடி) வேகமாக ஆடுதல், 2 அலங்கார பதங்கள் கஸ்திரமுடன் | • பாரம்பரிய தனித்துவம் பேணும் வகையில் மேள வாத்தியத்துக்கு ஏற்பப் பாடிக்கொண்டு 'அஸ்னே' என்பதை ஆற்றுகைப் படுத்துவார். | |
| | | **கீழைத்தேய**<br>• 'விஷ்னு மல் அஸ்ன' | • மேள வாத்தியத்துக்கு ஏற்ப சரியான சுவடுகளுடன் 'விஷ்னு மல் அஸ்ன' பாடல்களைப் பாடிய வண்ணம் அவற்றை ஆற்றுகைப்படுத்துவார். | |
| | | • சுத்த மாத்திரை | • மேள வாத்தியத்துக்கு ஏற்ப சரியான சுவடுகளுடன் 'சுத்த மாத்திரை' பாடல்களைப் பாடிய வண்ணம் அவற்றை ஆற்றுகைப் படுத்துவார்.<br>• பாரம்பரிய தனித்துவம் பேணும் வகையில் பாடிக்கொண்டு தனியாக நடனங்களை முன் வைப்பார். | |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளை |
|---|---|---|---|---|
| | | **சப்பிரகமுவ**<br>• 'சமன் தெவி மல் அஸ்ன' | • பாரம்பரிய தனித்துவம் பேணும் வகையில் 'சமன் தெவி மல் அஸ்ன' நடன அமைப்பை முன் வைப்பார். | |
| | | • மூல மாத்திரை | • தவில் வாத்தியத்துக்கு ஏற்ப பாரம்பரிய தனித்துவம் பேணும் வகையில் பாடிக்கொண்டு மூல மாத்திரையை முன்வைப்பார். | |
| | 1.7 வேறு பாரம்பரியங்களுடன் தொடர்புடைய நடன அமைப்புகளை முன்வைப் பார். | • மலைநாட்டு - மங்கலம்<br>• கீழைத்தேய - சுத்த மாத்திரை<br>• சப்பிரகமுவ - மூல மாத்திரை | • இலங்கையில் மூவகை நடன பாரம்பரியத்தின் அடிப்படை நடன அமைப்புகளும் அவற்றின் சிறப்பியல்புகளும் பற்றிய விரிவான கருத்துக் களை முன்வைப்பார். | 15 |
| 2.0 நடனத்துடன் தொடர் புடைய கோட்பாடு களை ஆராய்ந்து கற்று அவற்றை பிரயோகப்படுத்துவார். | 2.1 பாவங்கள், ரசங்கள் பற்றிய தகவல்களை விமர்சிப்பார். | • இரச பாவம்<br>• நவ நலு ரசய - பிரயோகம் (கிராமிய நாட்டிய நாடகம், சன்னி, பாலி, சாந்திகர்ம உள்ளடக்கிய கதாபாத்திரங்கள் அடங்கலான) | • இரச வெளிப்பாடு உண்டாகும் விதத்தை விமர்சிப்பார்.<br>• பாவ அசையை அழுத்திச் செல்ல உண்ணாட்டு நடன சம்பிரதாயங்களை உபயோகப் படுத்தப்பட்டிருக்கும் விதம் பற்றிய கருத்துக்களை முன் வைப்பார். | 05 |
| | | • பாவ வெளிப்பாட்டை மெருகூட்டப் பயன்படும் வழிமுறைகள். | • 'நவ நலு ரசங்களை' நுட்ப முறைகளைப் பயன்படுத்தி அபிநயிப்பார். | |
| | 2.2 பாவங்கள் வெளிப்படும் விதத்தில் கதாபாத்திரங் களை ஆற்றுகைப்படுத்து வார். | • ஐச, முதலி, நொஞ்சி, பறயா, ரீரியகா | • பாவங்கள் வெளிப்படும் விதத் தில் கதாபாத்திரங்களை ஆற்றுகைப்படுத்துவார். | 10 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளை |
|---|---|---|---|---|
| | 2.3 உண்ணாட்டு நடனப் பாரம் பரியத்துடன் தொடர்புடைய தாள லட்சணங்கள் பற்றி விளக்குவார். | **தேசிய தாளத்தொகுதியின் வளர்ச்சி**<br>• தனிதித்த<br>• தெதித்த<br>• துன்தித்த<br>• சிவ்தித்த<br>• பஸ்தித்த தாள | • உண்ணாட்டு நடனக் கலை யுடன் தொடர்புடைய தாள வகைகளை இனங்கண்டு அவற்றை விளக்குவார்.<br>• தேசிய தாளத்தொகுதியின் வளர்ச்சியை விளக்குவார். | 07 |
| | 2.4 உண்ணாட்டு நடனக் கலையுடன் தொடர்புடைய தாள ரூபகங்களையொத்த இந்துஸ்தானி, கர்னாடக தாள வகைகளை விமர்சிப் பார். | **உண்ணாட்டு, இந்துஸ்தானி கர்நாடக தாள வகைகள்.**<br>• மாத்திரை 2, 3, 4 தனிதித்த<br>• மாத்திரை 2+3, 3+4 தெதித்த தாளம் | • உண்ணாட்டு நடனக் கலையுடன் தொடர்புடைய தாள ரூபகங் களையொத்த இந்துஸ்தானி, கர்நாடக தாளங்கள் பற்றிய விபரங்களை முன்வைப்பார். | 10 |
| | 2.5 நடனத்துடன் தொடர்பு டைய பாடல்களுக்கும் நடன அமைப்புகளுக்கு முரிய இசைக் குறியீடு களைப் பிரயோகிப்பார். | **இசைக்குறியீடுகளைப் பிரயோகிப்பார்.**<br>• வண்ணம் / மங்கலம் / மூல மாத்திரை / கீழைத்தேய சுத்த மாத்திரை / ‘கிரக பந்தி கவி’<br>• இசைக்குறியீடுகள் | • இசைக்குறியீடுகளின் அடிப் படைக் கோட்பாடுகளையும் அதன் விதிமுறைகளையும் விபரித்துக் கூறுவார்.<br>• சரியான முறையில் பாடல்களுக் கும் நடன அமைப்புகளுக்கு முரிய இசைக் குறியீடுகைளப் பிரயோகிப்பார். | 08 |
| 3.0 பாரம்பரிய இசைக் கருவிகளின் அமைப்பை உணர்ந்து அவற்றை வாத்தியம் செய்யும் திறமையை வெளிப் படுத்துவார். | 3.1 அங்கீகரிக்கப்பட்ட இசைக் கருவிகள் அமைக்கும் நுட்பமுறைகள் பற்றிய தகவல்களை முன்வைப் பார். | • பறை, கீழைத்தேய மேளம், தவில், தம்மட்டம், உடுக்கு அமைக்கும் நுட்பமுறைகளும் அதன் வளங்களும். | • பாரம்பரிய இசைக்கருவிகளின் அமைப்பை விளக்குவார்.<br>• இசைக்கருவிகள் அமைக்கப் படும் நுட்பமுறைகளையும் விளக்கங்களையும் பற்றிய தகவல்களை முன்வைப்பார். | 08 |
| | 3.2 சரியான நுட்பமுறைகளைப் பயன்படுத்தி மேளம்/தவில் ஆகியவற்றின் ‘சரிம்ப பத’ ங்களை இசைத்துக் காட்டு வார். | **இசைத்தல்**<br>• மேளம்/தவில் சரம்ப பத 1-5<br>• மொட்டுகள் | • சரியான நுட்பமுறைகளைப் பயன்படுத்தி மேளம்/தவில் ஆகியவற்றின் ‘சரம்ப பதங்களை’ மூவகை லயத்தில் தனியாக இசைப்பார். | 10 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளை |
|---|---|---|---|---|
| | 3.3 'வண்ணம்' பாடிக்கொண்டே மேளம்/தவில் இசைக் கருவிகளை இசைப்பார். | • கற்ற வண்ணங்களின் அடிப்படை மேளப் பதங்கள் (பாடலுடன்) கஸ்திரம்/இரட்டி/கலாசம் | • சரியான நுட்பமுறைகளில் மேளம்/தவில் இசைத்துக் கொண்டே பாடுவார்.<br>• சரியான நுட்பமுறைகளைப் பயன்படுத்தி கஸ்திரம்/இரட்டி/ கலாசம் இசைப்பார். | 10 |
| 4.0 பல அனுபவங்களைக் கொண்டு ஆக்கங்கள் புரிவார். | 4.1 சூழுலை அவதானிப்பதன் மூலம் பெற்ற அனுபவத்தினைக் கொண்டு கதாபாத்திரங்களை அபிநயிப்பார். | • நிகழ்வொன்றைக் கொண்ட கதாபாத்திரங்களை வெளிப்படுத்துதல். | • கதாபாத்திரங்களை வெளிப்படுத்திப் பொருத்தமான நிகழ்வொன்றை உருவாக்குவார்.<br>• உருவாக்கிய நிகழ்வுக்குப் பொருத்தமான கதாபாத்திரங்களை அபிநயபப்பார். | 08 |
| | 4.2 கதாபாத்திரங்கள் வெளிப்படுத்தக்கூடிய நுட்பமுறைகளை ஆராய்ந்தறிந்து ஒப்பனைகளைப் புனைவார். | • ஒப்பனைக்கான முகச் சாயங்கள், பூச்சுக்கள்.<br>• கதாபாத்திரங்கள் வெளிப்படுத்தும் நுட்பமுறைகள்<br>• சாந்திக்கிரிகைகளுடன் தொடர்புடைய பல பாத்திரங்கள், நாடகச் சந்தர்ப்பங்கள், மேடைநாடகம் என்பவற்றுக்கு ஒப்பனை செய்தல். | • பாரம்பரிய நவீன ஒப்பனைகளுக்கான பூச்சு வகைகளைக் குறிப்பிடுவார்.<br>• பாரம்பரிய, நவீன ஒப்பனைகளுக்கான பூச்சு வகைகளின் நுட்ப முறைகளை விளக்குவார்.<br>• நுட்பமுறைகளை உபயோகித்து ஒப்பனைகளைப் புனைவார். | 10 |
| | 4.3 பல பொருள்களையும் நுட்பமுறைகளையும் உபயோகித்துப் பாரம்பரிய தள வடிவங்களைக் கொண்ட அரங்க ஆபரணங்களை ஆக்குவார். | • பாரம்பரிய தள வடிவங்கள் வெளிப்படும் விதத்தில் அரங்க ஆபரணங் களை அமைத்தல் (காது, தோள், மார்பு, கழுத்து, இடுப்பு, கைகள், கால்கள்) | • தெரிவுசெய்யப்பட்ட மூலப் பொருள்களைக் கொண்டு தனியாக அல்லது குழுவாக இணைந்து பாரம்பரிய தள வடிவங்கள் வெளிப்படும் விதத்தில் அரங்க ஆபரணம் ஒன்றை முழுமையாக நிர்மாணிப்பார். | 10 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளை |
|---|---|---|---|---|
| | 4.4 பல பொருள்களையும் நுட்ப முறைகளையும் உபயோகித்து அரங்க ஆபரணங்களை ஆக்க பூர்வமாக உருவாக்குவார். | • ஆக்கபூர்வமான அரங்க ஆபரணங்கள் அமைத்தல் (காது, கழுத்து, மார்பு, தோள், இடுப்பு, கைகள், கால்கள், ஆண், பெண் இருபாலாரின் தலை அலங்காரம்) | • தெரிவுசெய்யப்பட்ட மூலப் பொருள்களைக் கொண்டு தனியாக அல்லது குழுவாக இணைந்து அரங்க ஆபரணம் ஒன்றை ஆக்கபூர்வமாக முழு நிறைவுடன் நிர்மாணிப்பார். | 10 |
| 5.0 இலங்கைக் கலாசாரத்துடன் தொடர்புபட்ட பாடல்களின் பின்னணியை ஆராய்ந்து கற்று பாடல் திறமையை வெளிப்படுத்துவார். | 5.1 'சாந்திகர்ம'வுடன் தொடர்புடைய பாடல் களை முன் வைப்பார். | • அங்கீகரிக்கப்பட்ட பாடல்களின் பின்னணி<br>**'சாந்திகரம்ம'வுடன் தொடர்புடைய பாடல்கள்.**<br>• மடுபுரே கவி, நானுமுர கவி, கொஹொம்பா ஹேல்ல, கிரக பந்தி கவி | • பாரம்பரிய பாடல்களின் பின்னணியை விளக்குவார்.<br>• சொந்தக்குரலில் தாளம், நாதம் சரியாக அமையும் விதத்தில் தனியாகப்படுவார். | 06 |
| | 5.2 நடனங்களுடன் தொடர்புடைய பாடல்களை முன் வைப்பார். | **நடனத்துடன் தொடர்புடைய பாடல்கள்.**<br>• மலைநாட்டு வண்ணம் /மங்கலம்/ அஸ்னே<br>• கீழைத்தேய சிந்து வண்ணம் கொத்தல பதய, சுத்த மாத்திரை<br>• சப்பிரகமுவ வண்ணம் மூல மாத்திரை, யக்பத மாத்திரை, கெண்டி பாலிய | • இதுவரை கற்ற பாரம்பரிய நடனத்துடன் தொடர்புடைய பாடல்களைப் பாடுவார்.<br>• நாட்டார் நடனங்களுடன் தொடர்புடைய பாடல்களை தாளம், நாதம் என்பன பேணும் விதத்தில் பாடுவார். | 06 |
| | 5.3 நாட்டார் நடனங்களுடன் தொடர்புடைய உடுக்கு, சல்லாரி பாடல்களைப் பாடுவார். | • உடுக்கு, சல்லாரி பாடல்களைப் பாடுவார். | • அங்கீகரிக்கப்பட்ட பாடல்களின் சிறப்புப் பண்புகளை விளக்கிக் கூறுவார்.<br>• உடுக்கு, சல்லாரி நாட்டார் நடனங்களுடன் தொடர்புடைய பாடல்களை சரியான தாள நாதம் என்ப வற்றுக்கேற்பப் பாடுவார். | 02 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளை |
|---|---|---|---|---|
| | 5.4 கிராமியப் பாடல்களையும் 'சேகி' களையும் பாடுவார். | **கிராமியப் பாடல்களும் "சேகி"**<br>• பத்தல் கவி (சுரங்கப்பாடல்கள்) டீக்கா சீப்பத, பாடல்கள் 'நெலும் கவி', பிரஸஸ்தி கவி, ஹுட்டன் கவி (போராட்டக்ககவி) | • தாளத்துடனும் தாளமின்றியும் கிராமியப் பாடல்களை சரியான நாதங்களுடன் பாடுவார்.<br>• 'சேகி' சரியான தாள நாதம் என்பவற்றுக்கேற்பப் பாடுவார். | 04 |
| 6.0 நடனக்கலையுடன் தொடர்புடைய வரலாற்றுப் பின்னணி யையும் கலாசாரப் பின்னணியையும் ஆராய்ந்தறிந்து தேசிய உரிமை களைப் பாதுகாக்கச் செயற்படுவார். | 6.1 நடனத்தின் வரலாற்றுப் பின்னணியையும் கலாசாரப் பின்னணியையும் விளக்கு வார். | • நடனக் கலையின் ஆரம்பமும் அதன் வளர்ச்சியும்<br>• சமூக, சமயத் தேவைகள் (வழிபாடு, நம்பிக்கை என்பன ஆதாரமாகக் கொண்ட) | • நடனக் கலையின் ஆரம்பமும் அதன் வளர்ச்சியையும் விளக்கு வார்.<br>• சமூக, சமயத் தேவைகளுக்காக நடனத்தை உபயோகித்த விதத்தை ஆராய்ந்துரைப்பார். | 06 |
| | 6.2 உண்ணாட்டு நடனக் கலை யின் ஆரம்பம், வளர்ச்சி பற்றிய தகவல்களை மூலாதாரங்களைக்கொண்டு விளக்குவார். | • பௌத்தத்துக்கு முந்திய காலத்திலிருந்து குருணாகல் காலம் வரை<br>பௌத்தத்துக்கு முந்திய காலம், பிந்திய காலம், அனுராதபுரம், பொலன்னறுவை, தம்பதெனி, குருணாகல் காலம்) | • பௌத்தத்துக்கு முந்திய காலம், பிந்திய காலம், அனுராதபுரம், பொலன்னறுவை, தம்பதெனி, குருணாகல் காலங்களில் காணப்பட்ட மூலாதாரங்களுடன் தொடர்புடைய காரணிகளின் அடிப்படையில் நடனக் கலையின் வரலாற்று ரீதியான தகவல்களை விளக்குவார்.<br>• பலவித மூலாதாரங்களின் அடிப்படையில் நடனக் கலை இருந்த நிலை பற்றிய தகவல் களை வெளிப்படுத்துவார். | 10 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளை |
|---|---|---|---|---|
| | 6.3 உண்ணாட்டு வண்ணம் களின் ஆரம்பம் அதன் வளர்ச்சி என்பவற்றை விளக்குவார். | • உண்ணாட்டு வண்ணங்களின் (மலைநாட்டு, கீழைத்தேய, சப்பிரகமுவ) ஆரம்பமும் வளர்ச்சியும் | • உண்ணாட்டு 'வண்ணம்' களின் ஆரம்பம், வளர்ச்சி என்பன பற்றிய தகவல்களை வெளிப் படுத்துவார்.<br>• மலைநாட்டு, கீழைத்தேய, சப்பிரகமுவ நனடப் பாரம்பரிய 'வண்ணம்' களின் சிறப்பியல்பு களை ஒப்பிட்டு விளக்குவார். | 08 |
| | 6.4 உண்ணாட்டு நடன பாரம் பரியத்துக்குரிய அங்கீகரிக் கப்பட்ட 'சாந்திகர்ம' பற்றிய தகவல்களை ஆராய்ந்து அறிவார். | • 'வலியக் மங்கலம்' | • வலியக் மங்கலம் சாந்தி கர்மாய வில் உள்ளடக்கப்படும் நடனங்கள், வாத்தியங்கள், பாடல்கள், அரங்க ஆபரணங் கள், சோட னைகள், வழக்கங் கள் பற்றிய தகலவ்களை முன்வைப்பார். | 06 |
| | | • கிரி மடுவ | • கிரி மடுவ, ரட்ட யக்கும நடத்தப் படும் நோக்கம், அரங்க அலங்கரிப்பு முறைகள், பாடல்கள், வாத்தியங்கள். | 06 |
| | | • ரட்ட யக்கும | அரங்க ஆபரணங்கள், வழக் கங்கள் பற்றிய தகவல்களை முன்வைப்பார். | 06 |
| | | • பலி சாந்திகர்மய | • 'பலி சாந்திகர்மய' நடத்தப்படும் நோக்கம். அலங்கரிப்பு முறைகளின் சிறப்பியல்புகள் போன்றவற்றை விளக்குவார். | 06 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளை |
|---|---|---|---|---|
| 7.0 ரசனை வளர்ச்சியை முன்னிட்டு பலவித கலாசாரங்களின் பெறுமதியை மதிப்பிட்டுப் பேசுவார். | 7.1 அங்கீகரிக்கப்பட்ட சிங்கள, தமிழ் கிராமிய நடனங்களை ஒப்பிட்டு விளக்குவார். | • கோலாட்டம், செம்பு நடனம், அரிவு வெட்டுதல், சுளகு நடனம், உலக்கை நடனம், பத்துரு தாளம், காவடி, கொழுந்து பறித்தல். | • சிங்கள, தமிழ் கிராமிய நடனங்களின் சிறப்பியல்புகளை விளக்குவார்.<br>• சிங்கள, தமிழ் கிராமிய நடனங்களை ஒப்பிட்டு விளக்குவார். | 08 |
| | 7.2 கொஹும்ப கங்காரிய, ரட்ட யக்கம், பஹன்மடுவ எனும் சாந்திகர்மங்களில் உள்ள நடன நிகழ்வுகளை விளக்குவார். | • கொஹும்ப கங்காரியின் ஊராயக்கம, ரட்ட யக்குமவின் நானுமுரய, பஹன் மடுவவின் பொத்கடே யக்கம. (பொக்கடே யக்கம) | • ‘சாந்திகர்ம’ களில் காணப்படும் நடன நிகழ்வுகளில் உள்ள ஒத்த, எதிர்ப் பண்புகளை விளக்குவார். | 08 |
| | 7.3 பாரத (இந்திய) நடனத்தின் பாரம்பரியத்தின் ஆரம்பம் அதன் வளர்ச்சி என்பவற்றை விளக்குவார். | • பாரத (இந்திய) நடனம், கதக், கதகளி, மணிப்பூரி நடன பாரம்பரியங் களின் ஆரம்பம், அவற்றின் வளர்ச்சி (18-20 வரையுள்ள நூற்றாண்டுகள்) | • பாரத (இந்திய) நடனத்தின் ஆரம்பம், வளர்ச்சி என்பவற்றை விளக்குவார். | 08 |
| | 7.4 தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகும் நடன நிகழ்ச்சிகள் பற்றிய தகவல்களை முன்வைப்பார். | • தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகும் நடன பாடத்துடன் தொடர்புடைய சாஸ்திரிய நிகழ்ச்சிகள் போட்டிகள் (சிறுவர், பெரியோர்) இக்கால நடன அமைப்புகள் | • தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகும் இக்கால நிகழ்ச்சிகளை பார்வையிட்டு அவற்றை விளக்குவார். | 06 |
| | 7.5 ‘‘பரிசில் பட்டாச்சாரா முத்திரை நாட்டிய’’ ஐப் பார்வையிட்டு விளக்குவார். | • “பரிசில் பட்டாச்சாரா நாட்டிய” | • “பரிசில் பட்டாச்சாரா முத்திரை நாட்டிய’’ ஐப் பார்வையிட்டு, அதன் உள்ளடக் கம் பற்றிய விளக்கத்தை முன்வைப்பார். | 10 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளை |
|---|---|---|---|---|
| 8.0 நடனக்கலைக்கும் ஏனைய நுண்கலைகளுக்கும் இடையிலான தொடர்பை ஆராய்ந்தறிந்து தகவல் களை முன்வைப்பார். | 8.1 இலங்கையில் நடனத்துக்கும் நாடகத்துக்கும் இடையில் உள்ள தொடர்பின் கருத்துக்களை முன்வைப்பார். | • நடனத்துக்கும் நாடகத்துக்கும் இடையில் உள்ள தொடர்பு (சாந்திகர்ம, பிரயோக ஆடல், பாடல், நடனம், சங்கீதம் என்பவற்றினூடாக) | • நடனக் கலைக்கும் சங்கீதத்துக்கும் இடையிலுள்ள தொடர்பின் முக்கியத்துவம் பற்றிய கருத்துக்களை முன்வைப்பார். | 06 |
| | 8.2 நடனத்துக்கும் நாடகத்துக்கும் இடையில் உள்ள தொடர்பின் சிறப்பியல்புகளை விளக்குவார். | • நடனக்கலைக்கும் நாடகத்துக்கும் இடையிலுள்ள தொடர்பு | • நடன்ககலைக்கும் நாடகத்துக்கும் இடையிலுள்ள தொடர்பை விளக்குவார்.<br>• நாடகங்கள் பலவற்றில் காணப்படும் நடனங்களின் சிறப்பியல்புகளை விளக்குவார்.<br>• சித்திரககலைக் கோட்பாடுகள், நுட்பமுறைகளை விவரிப்பார். | 06 |
| | 8.3 நடனக் கலைக்கும் சித்திரக் கலைக்கும் இடையிலான தொடர்புகளை விசாரணை செய்வார். | • நடனக் கலைக்கும் சித்திரக்கலைக்கும் இடையிலான தொடர்பு<br>• நடனக்கலை, சித்திரக்கலைக் கோட்பாடுகளும் நுட்பமுறைகளும் | • சித்திர ஒழுங்கிணைப்பு, ஆடற்கலை என்பவற்றுக்கிடையிலுள்ள தொடர்புகள் பற்றிய தகவல்களை விளக்குவார். | 06 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளை |
|---|---|---|---|---|
| 1.0 நடனத்துடன் தொடர்பான அடிப்படை அம்சங்களைக் கொண்டு செயன்முறைத் திறன்களை வெளிப்படுத்துவார். | 1.1 நடன ஆற்றல்களை வெளிப்படுத்தத் தேவையான துள்ளல்களையும் சுற்றுதல்களையும் உபயோகப்படுத்துவார். | • நடன ஆற்றல்கள் வெளிப்படுத்தத் தேவையான துள்ளல்கள், சுற்றுதல்கள். | • பாரம்பரிய நடனங்களுடன் தொடர்புடைய துள்ளல்கள், சுற்றுதல்கள் என்பவற்றை முன்வைப்பார்.<br>• துள்ளல்களையும் சுற்றுதல்களையும் சரியான முறைகளுக்கு இணங்க வெளிப்படுத்துவார். | 06 |
| | 1.2 பாரம்பரிய இயல்புகள் வெளிப்படும் விதத்தில் வண்ணம் ஆற்றுகைப் படுத்துவார். | **வண்ணம்-மேலைத்தேய(உடரட)**<br>• உக்குஸ்ஸா (பருந்து)<br>• சுரபத்தி, கஜகா | • குழுவாக இணைந்து கற்ற வண்ணங்களை வெளிப்படுத்துவார்.<br>• கற்றுக்கொண்ட வண்ணங்களை மேள வாத்தியத்திற்கேற்பப் பாடிக்கொண்டு சரியான சுவடுகள் வெளிப்படும் விதத்தில் தனியாக அபிநயித்துக் காட்டுவார். | 15 |
| | | **சிந்து வண்ணம்-கீழைத்தேய**<br>• 'கொண்டநாவிச்சி தாளம்' 'கிரஹதண்ட தாளம்' 'செபலுவெச்சி தாளம்' (செண்டவேதீ, சொந்த வெடிச்சி) | • குழுவாக இணைந்து கற்றுக் கொண்ட 'சிந்து வண்ணங்களை' ஆற்றுகைப் படுத்துவார்.<br>• கற்றுக்கொண்ட சிந்து வண்ணங்களை மேள வாத்தியத்திற்கேற்பப் பாடிக்கொண்டு சரியான சுவடுகள் வெளிப்படும் விதத்தில் தனியாக அபிநயித்துக் காட்டுவார். | |
| | | **வண்ணம்-மலைநாடு(சப்பிரகமுவ)**<br>• ஆனந்த, மேக, அட்டகுரு காஹக்க | • குழுவாக இணைந்து கற்ற வண்ணங்களை வெளிப்படுத்துவார்.<br>• கற்றுக்கொண்ட வண்ணங்களை தவில் வாத்தியத்திற்கேற்ப பாடிக் கொண்டு சரியான சுவடுகள் வெளிப்படும் விதத்தில் தனியாக அபிநயித்துக் காட்டுவார். | |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளை |
|---|---|---|---|---|
| | 1.3 பாடலின்றி மலைநாட்டு/ கீழைத்தேய சப்பிரகமுவ பாரம்பரிய நடனங்களை முன்வைப்பார். | **உடரட**<br>• குந்த குஜிகத்த வட்டம் (பதங்கள் 4, கஸ்திரம் 4, அடவு 4 முழுமைப் பதங்களுடன்)<br><br>• கொக் கொக் ஜிங் ஜிங்கத்த வட்டம் (பதங்கள் 2, அடவுகள் 2 முழுமைப்பதங்களுடன்)<br><br>• ஆவெந்தும (ஆரம்பத்தில் இருந்து கத்தத் ஜிங்குத கஸ்திரமவுடன்)<br><br>• யக் அன்னும - முதலாம் வட்டம் தக்குங்தாங் தக்கட தக ஜிங்கத்த வரை)<br><br>**கீழைத்தேய**<br>• சிய பதய, நடந்தூவ | • கற்றுக்கொண்ட 'வட்டம்' களை குழுவாக இணைந்து அபிநயிப்பார்.<br><br>• கற்றுக்கொண்ட 'வட்டம்' களின் பதங்கள், கஸ்திரம், அடவு மேள வாத்தியத்திற்கேற்ப சரியான சுவடுகள் வெளிப்படும் விதத்தில் தனியாக அபிநயித் துக் காட்டுவார்.<br><br>• மேள வாத்தியத்துக்கு ஏற்ப சரியான சுவடுகளுடன் ஆவெந்தும என்பதை தனியாக அபிநயிப்பார்.<br>• தனியாக அபிநயிக்கும்போது ஆவெந்துமவின் நுட்பத் திறமை களை வெளிப்படுத்துவார்.<br><br>• பூஜை உபசரணங்களுடன் பாரம் பரிய இயல்பகள் புலப்படும் வகையில் மேள வாத்தியத்துக் கேற்ப யக் என்னும் நடனத்தை ஆற்றுகைப்படுத்துவார்.<br><br>• மேளவாத்தியத்திற்கு ஏற்ப சரியான சுவடுகளுடன் சிய பதய, நடந்தூவ நடன அமைப்புகளைச் சரியான சுவடுகளுடன் தனியாக அபிநயிப்பார். | 24 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளை |
|---|---|---|---|---|
| | | • 'தெவொல் பத' ஆரம்பத்திலிருந்து 3 பதங்கள் வரை (மேளப்பதம், அலங்காரப்பதம், இரட்டிப்பு பதம் அடலங்கலாக)<br><br>• யகன் தெக்ம<br><br>• பத்தினி பத 03 இரட்டியுடன் (சுரல்)<br><br>**சப்பிரகமுவ**<br>• பட்டுதள் மாத்திரிரை, யாதினி மாத்திரை (கலாசம், வட்டம், கலசம அடவு)<br><br>• யகன் தெக்ம (ஆரம்பத்தில் இருந்து கத்த குக்குத்தக்க தொங் குந்தத் தரிக்கிட்ட வரை) | • தெவொல் நடன அமைப்பை மேள வாத்தியத்துக்கு ஏற்ப சரியான சுவடுகளுடன் தனியாக அபிநயிப்பார்.<br><br>• மேள வாத்தியத்துக்கு ஏற்ப சரியான சுவடுகளுடன் 'யகன் தெக்ம' என்பவற்றை ஆற்றுகைப் படுத்துவார்.<br><br>• மேள வாத்தியத்துக்கு ஏற்ப சரியான சுவடுகளுடன் 'பத்தினி பத' என்பவற்றை ஆற்றுகைப் படுத்துவார்.<br>• நுட்பத்திறன்கள் வெளிப்படும் படி 3 பத்தினிப் பதங்களைத் தனியாக அபிநயிப்பார்.<br><br>• தவில் வாத்தியத்துக்கு ஏற்ப சரியான சுவடுகளுடன் பட்டுதல் மாத்திரை, யாதினி மாத்திரை என்பவற்றை அபிநயிப்பார்.<br><br>• தவில் வாத்தியத்துக்கு ஏற்ப சரியான சுவடுகளுடன் 'யகன் தெக்ம' என்பதை ஆற்றுகைப் படுத்துவார்.<br>• நுட்பத்திறன்கள் வெளிப்படும் படி 'யகன் தெக்ம' என்பதை தனியாக அபிநயிப்பார். | |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளை |
|---|---|---|---|---|
| | | • தேவகோல் பாடுவ (முதல் வட்டம் வரை) | • தவில் வாத்தியத்துக்கேற்ப சரியான சுவடுகளுடன் 'தேவ கோல் பாடுவ' என்பதை ஆற்றுகைப்படுத்துவார்.<br>• நுட்பத்திறன்கள் வெளிப்படும் படி 'தேவ கோல் பாடுவ' என்பதைத் தனியாக அபிநயிப்பார். | |
| | 1.4 பூஜைக்கு உபயோகிக்கப்படும் உபகரணங்களை சரியாகக் கையாண்டு புலத்பதய/யக் எனும் தலுமுர பதயதலுமுர பாலிய நடன அமைப்புகளை ஆற்றுகைப் படுத்துவார். | • **மலைநாட்டு**<br>- புலத் பதய' | • பூஜை உபகரணங்களை ஏந்திய வண்ணம், மேள வாத்தியத் துக்கு ஏற்ப சரியான சுவடுகளுடன் புலத் பதய என்பதை ஆற்றுகைப்படுத்துவார். | 10 |
| | | • **கீழைத்தேய**<br>- 'தலுமுர பதய' | • பூஜை உபகரணங்களை ஏந்திய வண்ணம் மேள வாத்தியத்துக்கு ஏற்ப சரியான சுவடுகளுடன் 'தலு முர பதய' என்பதை ஆற்றுகைப் படுத்துவார். | |
| | | • **சபரகமுவ**<br>- 'தலுமுர பாலிய' | • பூஜை உபகரணங்களை ஏந்திய வண்ணம் தவில் வாத்தியத்துக்கு ஏற்ப சரியான சுவடுகளுடன் தலுமுர பாலிய என்பதை ஆற்றுகைப்படுத்து வார். | |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளை |
|---|---|---|---|---|
| | 1.5 வேறு பாரம்பரியங்களுடன் தொடர்புடைய இரு நடன அமைப்புகளை முன்வைப்பார். | • மலைநாட்டு - மங்கலம்<br>• கீழைத்தேய - சுத்த மாத்திரை<br>• சப்பிரகமுவ - மூல மாத்திரை | • கற்கும் நடன பாரம்பரியங்களைத் தவிர்ந்த வேறு நடன பாரம்பரியத்தின் இரு நடன அமைப்புகளை ஆற்றுகைப் படுத்துவார்.<br>• மங்கலம், சுத்த மாத்திரை, மூல மாத்திரை நடன அமைப்புகளின் அடிப்படைச் சுவடுகளையும் சிறப்பியல்புகளையும் பற்றிய விளக்கங்களை விரிவாகக் காண்பிப்பார். | 20 |
| 2.0 நடனத்துடன் தொடர்புடைய கோட்பாடுகளை ஆராய்ந்து கற்று அவற்றை பிரயோகப்படுத்துவார். | 2.1 ஆடற் கலை நுட்பங்களை ஆராய்ந்தறிந்து தகவல்களை முன்வைப்பார். | • ஆடற்கலை<br>நடனங்களை ஆற்றுகைப் படுத்தும்போதும், கதாபாத்திரங்களை முன்வைக்கும்போதும் உபயோகிக்கப்படும் அசைவுகள், உடற் பாகங்களின் விரல்களின் அசைவுகள் | • ஆடற்கலையுடன் தொடர்புடைய அடிப்படை எண்ணக் கருக்களை விபரித்துக் கூறுவார்.<br>• நடனங்களை ஆற்றுகைப் படுத்தும் போதும், கதாபாத்திரங்களை முன்வைக்கும் போதும் உடற் பாகங்களின் அசைவுகள் உபயோகப்படும் விதங்களை ஆராய்ந்தறிந்து அவ் விடயங் களை முன்வைப்பார். | 10 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளை |
|---|---|---|---|---|
| | | • அரங்கத்தின் பயன்பாடு | • அசைவுக்கும் அரங்கத்துக்கும் இடையிலுள்ள தொடர்பை விபரித்துக் கூறுவார்.<br>• நடனங்களை ஆற்றுகைப் படுத்தும் போதும் கதாபாத்திரங் களை முன்வைக்கும்போதும் பொருத்தமான அசைவுகளை வெளிப்படுத்துவதுடன் அரங் கத்தை உபயோகப்படுத்து வதன் முக்கியத்துவத்தையும் விளக்கிக் கூறுவார். | |
| | 2.2 மரபுரீதியான (பாரம்பரிய) அரங்கையும் நவீன மேடை யையும் பற்றிய விளக்கங் களை முன்வைப்பார். | • மரபு ரீதியான (பாரம்பரிய) அரங்கும் அதன் வளர்ச்சியும்<br>• நவீன மேடை பற்றிய தகவல்கள் | • அரங்கு எனும் சொற்பதத்தை விளக்குவார்.<br>• மரபுரீதியான (பாரம்பரிய) அரங்கும் அதன் வரள்ச்சியும் பற்றிய தகவல்களை முன்வைப் பார்.<br>• நவீன மேடைகளில் காணப்படும் சிறப்பியல்புகளை விளக்கிக் கூறுவார்/ அபிநயிப்பார். | 08 |
| | 2.3 அங்கீகரிக்கப்பட்ட பாடல் களுக்கும் நடன அமைப்பு களுக்குமுரிய இசைக் குறியீடுகளைப் பிரயோகிப் பார். | • இசைக்குறியீடு<br>வண்ணம் / சிந்து வண்ணம்/ கொஹொம்ப ஹேல்ல கவி 01, நட்டயக்கும நானுமுரய கவி 01, கிரிமடுவ வில் பால் பொங்குதல் கவி 01 | • இசைக்குறியீடுகளுடன் தொடர்பு டைய குறியீடுகளை நேர்த்தியாக உபயோகித்து பாடல்களையும் 'வண்ணம்'களையும் இசைக் குறியீட்டில் காட்டுவார். | 12 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளை |
| --- | --- | --- | --- | --- |
| 3.0 பாரம்பரிய இசைக் கருவிகளின் அமைப்பை உணர்ந்து அவற்றை வாத்தியம் செய்யும் திறமையை வெளிப் படுத்துவார். | 3.1 'வண்ணம்' களை பாடிக் கொண்டு மேளம்/தவில் வாத்தியம் செய்வார். | **வாத்தியம்**<br>• கற்றறிந்த 'வண்ணம்' களின் அடிப்படை மேளப்பதங்கள் (பாடலுடன்) கஸ்திரம்/இரட்டி/ கலாசம் | • சரியான நுட்பமுறைகளைப் பயன்படுத்தி மேளம் / தவில் வாத்தியம் செய்துகொண்டு வண்ணம் / சிந்து வண்ணம் பாடுவார். | 09 |
| | 3.2 மகுல்பெர (திருமண மேள வாத்தியம்) / பூஜை மங்கள தவில் வாத்தியங்களுக் குரிய பதங்களின் பாரம் பரியப் பண்புகள் பேணும் விதத்தில் இசைப்பார். | **வாத்தியம்**<br>மலைநாட்டு<br>• மகுல் பெரிவின் தேவ பதம் ஆசீர்வாத பதம் குருபதம், வட்டம் முழுமை பெறும் வரை | • சரியான நுட்பமுறைகளுடன் மலைநாட்டு 'மகுல்பெர' வினை வாத்தியம் செய்வார். | 10 |
| | | கீழைத்தேய<br>• மகுல்பெர முதல் வட்டம் | • சரியான நுட்பமுறைகளுடன் கீழைத்தேய 'மகுல்பெர' வினை வாத்தியம் செய்வார். | |
| | | சப்பிரகமுவ<br>• பூஜை மங்கள தவில் வாத்தியம் | • சரியான நுட்பமுறைகளுடன் பூஜை மங்கள் தவில் வாத்தியத் தினை முன்வைப்பார். | |
| 4.0 பல அனுபவங்களைக் கொண்டு ஆக்கங்கள் புரிவார். | 4.1 குருத்தோலை, வாழை நார் களைக்கொண்டு அமைக் கப்படும் அமைப்புக்கள் நிர்மாணிப்பார். | • கொப்கெடிய | • குருத்தோலை, வாழை நார் களைக்கொண்டு அமைக்கப் படும் நிர்மாணிப்புக்கள் பற்றி ஆராய்ந்தறிந்து குறிப்பிடுவார்.<br>• உரிய நிர்மாணிப்புகளுக்கு உபயோகப்படுத்தும் மூலப் பொருள்களைக் குறிப்பிடுவார்.<br>• நிர்மாணிப்புக்குத் தேவையான பொருள்களைச் சேகரிப்பார். | 12 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளை |
|---|---|---|---|---|
| | | • 'பஹன் பெல' (பூ மரம்) | • தனியாகவும் குழுவாகவும் இணைந்து 'கொப் கொலய' பஹன்பொல என்பவற்றை நிர்மாணிப்பார். | |
| | 4.2 கற்றிருக்கும் நடனக் கலைக்குரிய ''யஹன்'' அலங்கரிப் பொன்றை நிர்மாணிப்பார். | • 'யஹன' (பாரம்பரிய முறைக் கேற்ப)<br><br>நுட்ப முறைகள், உபயோகிக்கப் பயன்படும் மூலப்பொருள்கள் அவற்றின் சிறப்பியல்புகள் | • குருத்தோலை 'யஹன' அலங்கரிப்புக்களைச் செய்வார்.<br>• அந்நிர்மாணிப்புக்கள் தொடர் பான விரிவான கருத்துக்களை முன்வைப்பார். | 12 |
| | 4.3 சிறிய 'முத்திரா நாட்டிய' ஒன்றினை நிர்மாணிப்பார். | • தொனிப்பொருளொன்றை ஆதார மாகக் கொண்ட 'முத்திரா நாட்டியம்' ஒன்று. | • முத்திரா நாட்டிய ஒன்றுக்கான தொனிப்பொருளொன்றை உருவாக்குவார்.<br>• குழுவாக இணைந்து உரு வமைத்த தொனிப்பொருளின் கீழ் நிர்மாணிப்பில் ஈடுபடுவார்.<br>• சிறிய 'முத்திரா நாட்டிய' ஒன்றினை குழுவாக இணைந்து நிர்மாணிப்பார். | 10 |
| 5.0 இலங்கைக் கலாசாரத்துடன் தொடர்புபட்ட பாடல்களின் பின்னணியை ஆராய்ந்து கற்று பாடல் திறமையை வெளிப்படுத்துவார். | 5.1 நடனங்களுடன் தொடர்பு டைய பாடல்களை முன் வைப்பார். | • நடனங்களுடன் தொடர்புடைய பாடல்களும் அவற்றின் பின்னணியும்.<br><br>• மலைநாட்டு வண்ணம் (உகஸ்ஸா, சுரபதி, கஜகா) | • அங்கீகரிக்கப்பட்ட நடனத்துடன் தொடர்புடைய பாடல்களின் பின்னணியை விளக்குவார்.<br><br>• கற்றிருக்கும் நடன பாரம்பரியத் துக்குரிய நடன அமைப்புகளின் பாடல்களைப் பாடுவார். | 06 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளை |
|---|---|---|---|---|
| | | மங்களம்<br>• கீழைத்தேய சிந்து வண்ணம் (கொண்டனாவிச்சி, மட்டய மண்ட, செபலுவெச்சி தாளம் சிந்து வண்ணம்)<br>• சுத்த மாத்திரை<br>• சப்பிரகமுவ வண்ணம் (ஆனந்த, மேக, அட்டக்குரு காஹுக்க) பட்டுதல் மாத்திரை, யாதினி மாத்திரை, தலுமுர பாலிய, மூல மாத்திரை | • வண்ணம் / சிந்து வண்ணம் என்பன சரியான தாளங்களுடன் பாடுவார். | |
| | 5.2 சாந்திகர்மவுடன் தொடர்புடைய பாடல்களை முன் வைப்பார். | • **சாந்திகர்ம கவி** வணக்கப்பாடல்கள், வரம் வேண்டல் பாடல்கள், இருபத்து நான்கு விவரணப்பாடல்கள்<br>• கடதுரா கவி, கிரி மடுவவில் பால்பொங்கும் பாடல்கள் (உடரட்ட, பஹத்தரட்ட, சம்பிரகமுவ கவிகள் 2 வீதம்) | • அங்கீகரிக்கப்பட்ட பாடல்களின் சிறப்பியல்புகளைக் கூறுவார்.<br>• அங்கீகரிக்ப்பட்ட பாடல்களின் பின்னணியை விளக்குவார்.<br>• அங்கீகரிக்கப்பட்ட பாடல்களில் சொற்பொருள் அறிந்து பாடுவார்.<br>• சரியான நாதத்துடன் சாந்திகர்ம பாடல்களைப் பாடுவார். | 06 |
| | 5.3 கிராமிய பாடல்களை முன்வைப்பார். | • பம்பரகம்பீமே கவி, வள்ளப் பாடல்கள் (பாரு கவி) கரத்த கவி (வண்டில் பாடல்கள்) ஒன்று வீதம் | • அங்கீகரிக்கப்பட்ட பாடல்களின் சிறப்பியல்புகளை விளக்குவார்.<br>• சரியான நாதத்துடன் 'பம்பர கெப்பீம்' வுக்குரிய 2 பாடல் களைப் பாடுவார்.<br>• சரியான நாதத்துடன் பாருகவி, கரத்த கவி என்பன பாடுவார். | 06 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளை |
|---|---|---|---|---|
| 06. நடனக்கலையுடன் தொடர்புடைய வரலாற்றுப் பின்னணி யையும் கலாசாரப் பின்னணியையும் ஆராய்ந்தறிந்து தேசிய உரிமை களைப் பாதுகாக்கச் செயற்படுவார். | 6.1 உண்ணாட்டு நடன்கலை வளர்ச்சியடைந்த வரலாற்றுப் பின்னணியின் காலப் பகுதிகளை விளக்குவார்.<br><br>6.2 உண்ணாட்டு நடனக் கலையின் ஆரம்பம், வளர்ச்சி பற்றிய தகவல்களை மூலாதாரங்களைக்கொண்டு விளக்குவார். | • காலங்கள்<br>கம்பளைக் காலத்திலிருந்து இதுவரை (கம்பளை, கோட்டை, கண்டி, கொழும்பு, தற்போதைய காலம்)<br><br>• கல்வியின் போக்குகள்<br>• ஊடகத்துறையின் புதுமை யாக்கம்<br>• சர்வதேச ரீதியான கலாசார தொடர்புகள்<br>• சமூகப் பொருளாதார புதுமை யாக்கம்<br>• உலகமயமாக்குதலின் புதுமை யாக்கம்<br><br>• நடனக் கலைத்துறையின் வளர்ச்சிக்கு உபயோகப்படும் உபகரணங்கள், நுட்பமுறைகள் பற்றிய தகவல்கள். | • கம்பளைக் காலத்திலிருந்து இன்று வரை உள்ள நடனக் கலையின் வளர்ச்சி பற்றிப் பல வித மூலாதாரங்களைக் கொண்டு பெற்ற தகவல்களை முன்வைப்பார்.<br><br>• உண்ணாட்டு நடனக் கலையில் காணப்படும் புதுமையாக்கங்கள் பற்றிய கருத்துகளை விரிவாக முன்வைப்பார்.<br><br>• நடனக் கலைத்துறையின் வளர்ச்சிக்கு உபயோகப்படும் தொழில்நுட்ப உபகரணங்கள், நுட்பமுறைகள் பற்றிய தகவல் களை முன்வைப்பார். | 10<br><br>06 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளை |
|---|---|---|---|---|
| | 6.3 'சன்னியக்கும' சாந்திகர்மய பற்றி விளக்குவார். | • 'சன்னியக்கும' எனப்படும் சாந்தி கர்மயவின் கதையில் உள்ளடங்கும் விழுமியங்கள், நடனங்கள், பாடல்கள், வாத்தியங்கள், கதாபாத்திரங்களின் வெளிப்பாடு, அரங்க ஆபரணங்கள், முக மூடிகள், அலங்கார வகைகள். | • 'சன்னியக்கும' எனப்படும் சாந்தி கர்மய வின் கதையில் கூறப்படும் விழுமியங்கள் பற்றிய தகவல்களை முன்வைப்பார்.<br>• 'சன்னியக்கும' எனப்படும் சாந்திகர்மயவில் உள்ளடங்கும் விடயங்களை ரசித்து நயப்பார்.<br>• தேசிய உரிமை ஒன்றாக 'சன்னியக்கும' என்பதைப் பாதுகாக்கப் பொருத்தமான யோசனையை முன்மொழிவார். | 08 |
| | 6.4 கலை நிகழ்ச்சியொன்றினை முன்வைப்பார். | • கலைநிகழ்ச்சி திட்டமிடல், ஒழுங்கமைப்பு முன்வைத்தல். | • ஒற்றுமையாகக் கலைநிகழ்ச்சி களை முன்வைப்பார்.<br>• நடன பண்பாட்டு மரபுரிமை களைக் காட்சிப்படுத்த ஆவன செய்வார். | 24 |
| 7.0 ரசனை வளர்ச்சியை முன்னிட்டு பலவித கலாசாரங்களின் பெறுமதியை மதிப்பிட்டுப் பேசுவார். | 7.1 பரதம், கதக் நடன அமைப்புகளைப் பார்வையிட்டு அவற்றின் சிறப்பியல்புகள் பற்றி விரிவாக விளக்குவார். | • பரத நாட்டியம் சப்தம் /வர்ணம்/தில்லானா | • பரத நாட்டிய பாரம்பரியத்தின் சப்தம் /வர்ணம்/தில்லானா எனப்படும் நடன அமைப்புகளில் ஒன்றைப் பார்வையிட்டு அதன் சிறப்பியல்புகளை எடுத்துரைப் பார். | 04 |
| | | • கதக் குருவந்தனம்/ பரன்/ நூம்ரி/ தரானா | • கதக் நடனக் கலை பாரம் பரியத்தின் குருவந்தனம்/ பரன்/ நூம்ரி/ தரானா எனப்படும் நடன அமைப்புகளில் ஒன்றைப் பார்வை யிட்டு அதன் சிறப்பியல்புகளை எடுத்துரைப்பார் | 04 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளை |
|---|---|---|---|---|
| | 7.2 மேற்கத்தேய 'பலே' யின் ஆரம்பம் வளர்ச்சி என்பனவற்றை விளக்குவார். | • இத்தாலியில் ஆரம்பம்<br>• பிரான்ஸ் இல் உண்டான மறுமலர்ச்சியும் வளர்ச்சியும்<br>• ஏனைய மேற்கத்தேய நாடுகளுக்கு வியாபித்தல்<br>• ரஷ்யாவில் உண்டான மறுமலர்ச்சி | • மேற்கத்தேய 'பலே' யின் ஆரம்பம், அதன் வளர்ச்சி என்பன பற்றிய தகவல்களை முன்வைப்பார். | 06 |
| | 7.3 ஹன்சவில / நட்கிராக்கர் பலே அமைப்பைக் கொண்ட நடனத்தைப் பார்வையிட்டு அவற்றின் சிறப்பியல்புகளை விரிவாக விளக்குவார். | • ஹன்சவில / நட்கிராக்கர் கதையில் வெளிப் படும் கருத்து, அதன் அரங்க ஆபரணங்கள், சங்கீதம், அரங்கத் தொழில் நுட்பம், ஆக்கத்துக்குத வும் கலைஞர்கள். | • ஹன்சவில / நட்கிராக்கர் பலே நடனக் கதை பார்வை யிட்டு அதன் சிறப்பியல்புகளை விளக்குவார்.<br>• ஹன்சவில / நட்கிராக்கர பலே நடனத்தை ஆதாரமாகக் கொண்டு மேற்கிலங்கைச் செயற்பாட்டைப் பற்றிய சிறப்பியல்புகளை விளக்குவார். | 08 |
| 08. நடனக்கலைக்கும் ஏனைய நுண்கலைகளுக்கும் இடையிலான தொடர்பை ஆராய்ந்தறிந்து தகவல் களை முன்வைப்பார். | 8.1 நடனக்கலையுடன் தொடர்புடைய பின்னணி அமைப்பு பற்றிய தகவல்களை முன்வைப்பார். | • நடனக் கலைடயுடன் தொடர்புடைய பண்டைய கால, நவீன கால ஒப்பனை, வேடம் பூணுதல்.<br>• ஒளியமைப்பு (பண்டைய கால, நவீன கால சாந்திகர்ம, தற்போதைய அரங்கு என்பன அடங்கலான)<br>• நடனக் கலையுடன் தொடர்புடைய பின்னணி அமைப்பும் அரங்க ஆபரணங்களும் நிர்மாணித்தல்.<br>• தற்போது உபயோகப்படுத்தும் இசையமைப்பு. | • பண்டைய கால, நவீன கால ஒப்பனை, வேடம் பூணுதல் பற்றிய தகவல்களை விளக்குவார்.<br>• சாந்திகர்மய தொடர்பான ஒளியமைப்பு, தற்கால அரங்க ஒளியமைப்பு முறைகள் பற்றிய விளக்கத்தை முன்வைப்பார்.<br>• 'சாந்திகர்மய' வில் பின்னணி அமைப்பு, அரங்க ஆபரணங்கள் என்பன உபயோகிக்கப்பட்டதன் அவசியம் பற்றிய கருத்துக்களை விளக்குவார்.<br>• நடனக் கலையுடன் தொடர்புடைய இசையின் முக்கியத்துவத்தை விளக்குவார். | 04<br>04<br>04<br>04 |

## 7.0 கற்றல் கற்பித்தல் முறைகள்

6ஆம் தரத்தில் இருந்து நடனக் கலையைக் கற்கும் மாணவன் எதிர்காலத் தொழிலை இலக்காகக் கொண்டு க.பொ.த. உயர்தரத்தில் நடனம் எனும் பாடத்தைத் தெரிவுசெய்கின்றான். எனவே நடன பாடத்துடன் தொடர்புபட்ட சிறப்பான விடயங்களைப் போலவே ஆழமான பாடக் குறிப்புகளை தர்க்க ரீதியாகவும் விமர்சனத்துக்குட்பட்டும், ஒப்பிட்டுக் கற்கக்கூடிய சந்தர்ப்பத்தை மாணவருக்கு வழங்க வேண்டும். வகுப்பறைக்குள்ளும் பாடாசலை சூழலுக்கு வெளியேயும் மாணவன் தான் கற்கும் பாடங்களுடன் தொடர்புடைய எண்ணக்கருக்கள், நிகழ்வுகள், பாடம் தொடர்பான விடயங்கள் என்பவற்றைக் கற்க வழிகாட்ட வேண்டியதுடன் அதற்குப் பொருத்தமான கற்றல் - கற்பித்தல் முறைகளை அறிமுகப்படுத்துவதிலும் ஆசிரியர் கவனம் செலுத்த வேண்டும்.

உயர்தரம் பாடவிதானத்தைப் பூர்த்தி செய்த மாணவனொருவன் செயன்முறையில் நடனம், பாடல், வாத்தியம், தொடர்பான திறன்களைக் கொண்ட ஒருவராக முழுமையடைந்திருக்க வேண்டும். எனவே மாணவன் இவ்வாறான தேர்ச்சிகளை அடைய ஆசிரியர் விசேட கவனம் செலுத்த வேண்டும்.

நிர்மாணிப்புகளுக்கு உதவும் சிந்தனைத் திறனை வளர்க்க சூழலை அவதானிக்க வேண்டியதுடன் அன்றாட வாழ்வில் எதிர்நோக்கும் சம்பவங்கள், பல்வேறுபட்ட அனுபவங்கள் என்பன துணைபுரிவதால் அவற்றின் மீது அவதானம் செலுத்த வேண்டும். அத்துடன் பலவிதமான ஊடகங்களில் வெளியாகும் நிகழ்ச்சிகளைக் கற்றறியவும், விமர்சிக்கவும் சந்தர்ப்பம் வழங்கப்படுவதால் நடன பாடம் வேறு தொடர்பாடல் முறைகளுடன் தொடர்புபட்டுள்ள விதத்தையும் நடன பாடம் ஏனைய பாடங்களுடன் தொடர்புபட்டுள்ள விதத்தையும் உணரும் பண்பு அதிகரிக்கும். எனவே மாணவனுக்கு எதிர்கால வேலையுலகில் இலகுவில் செயற்படக் கூடியதாகிவிடும்.

நடன பாடம் வாழ்க்கைக்கு தொடர்புபட்டிருக்கும் விதத்தை அறியவும், அதன் பெறுமதி, பாரம்பரிய இயல்புகள் என்பவற்றைப் பேணிப் பாதுகாக்கவும், நடனம் மக்கள் வாழ்க்கையுடன் எவ்வாறு பின்னிப் பிணைந்துள்ளது என்பதை ஆராய்ந்து அறியவும் உரிய வழியை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். எனவே இவற்றுக்குரிய விதத்தில் வேலைத்திட்டங்களை அமுல்படுத்த வேண்டும்.

ஒவ்வொரு சந்தர்ப்பத்திற்கும் பொருந்தும் விதத்தில் வேலைத்திட்டங்கள் திட்டமிட்டு ஒழுங்கமைக்கும் சுதந்திரம் ஆசிரியருக்குண்டு. உரையாடல், கலந்துரையாடல் முறை நோக்கல் முறை, ஆராய்ந்து கற்கும் முறை, களப் பயணம், கண்காட்சி, கலை நிகழ்ச்சிகள், செயற்றிட்டங்கள், பயிற்சிகள், படிமுறைகள், போலச் செய்தல் போன்ற கற்பித்தல் முறைகளை உபயோகிக்கலாம்.

## 8.0 பாடசாலைக் கொள்கைகளும் வேலைத்திட்டங்களும்

நடன பாட விதானம் தேர்ச்சிகளை அடிப்படையாகக் கொண்ட செயற்பாடுகள் மூலமே பாடசாலைகளில் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன. உரிய தேர்ச்சிகளை அடைவதில் பாட இணைச் செயற்பாடுகள் மிகவும் துணை பரிகின்றன. கண்காட்சி, கலைநிகழ்ச்சி, போட்டிகள், செயற்றிட்டங்கள், கலை சங்கங்கள், நூலக விமர்சனங்கள் போன்ற செயற்பாடுகளைத் திட்டமிட்டு ஒழுங்கமைத்துக் கொள்வதில் கவனம் செலுத்தப்படும்.

நடனமொன்றை உருவாக்குகையில் சூழலை நிச்சயமாக அவதானிக்க வேண்டியிருக்கிறது. சூழலில் நடைபெறம் பல்வேறுபட்ட நிகழ்வுகளில் உணர்ச்சிபூர்வமாகச் செயற்படுவதற்கு வேண்டிய ஆற்றலைப் பாடசாலையில் ஏற்படுத்திக்கொடுக்க வேண்டும். அதற்காகச் சுற்றுலாக்கள், கலை நிர்மாணங்கள், கலா நிலைய கல்விச் சுற்றுலாக்கள், பாடவிடய ஆராய்வுச் சுற்றுலாக்கள் என்பவற்றை ஒழுங்கமைக்க வேண்டும்.

மனித நடத்தைகளை ஒழுங்கமைப்பதில் மின்னணு ஊடகங்கள், அச்சு ஊடகங்கள் என்பன செல்வாக்கைச் செலுத்துகின்றன. ஊடகங்கள் மூலம் வெளியிடப்படும் நிகழ்ச்சிகளில் நல்லவற்றை மட்டும் தெரிவுசெய்து கொள்ளும் பண்மை மாணவர் கொண்டிருக்க வேண்டும். அதற்குத் தேவையான திறன் வளர்ச்சி, விமர்சிக்கும் திறன் வளர்ச்சி என்பன பெற்றுக் கொள்வதற்குப் பல் ஊடகங்களில் வெளியாகும் நிகழ்ச்சிகளைக் கற்றறியத் தேவையான வசதிகளை மாணவர்களுக்கு ஏற்படுத்திக் கொடுப்பதில் பாடசாலை நிர்வாகத்தினர் கவனம் செலுத்த வேண்டும்.

மேற்குறிப்பிட்ட செயற்பாடுகளுக்கும் நடன பாடத்துக்கும் இடையில் உள்ள தொடர்பை அறிந்துகொள்ள, பாடசாலைச் சூழல் கற்றல் அனுபவங்களைப் பெறக்கூடிய கவர்ச்சியான ஒரு இடமாக அமைகிறது.

## 9.0 கணிப்பீடும் மதிப்பீடும்

பாடசாலை மட்ட மதிப்பீட்டுச் செயற்பாட்டின் கீழ் ஒவ்வொரு தவணைக்காகவும் தேர்ச்சி, தேர்ச்சி மட்டங்களை உள்ளடக்கி மதிப்பீட்டுக் கருவிகள் அமைக்கப்பட வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. தரம் 13 இன் இறுதியில் தேசிய மட்டத்தில் நடைபெறும் க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்காக இப்பாடவிதானம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இப்பாடவிதானத்தை அடிப்படையாகக் கொண்டு இலங்கை பரீட்சைத் திணைக்களத்தால் நடாத்தப்படும் தேசிய மட்டத்திலான பரீட்சை 2019 ஆம் ஆண்டில் முதன் முதலாக நடைபெறும். இப்பரீட்சைக்குரமிய வினாத்தாள்களின் கட்டமைப்பு மற்றும் தன்மை பற்றிய மேலதிக விபரங்கள் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் வெளியிடப்படும்.

# பாடத்திட்டக்குழு

**இணைப்பாக்கம்** - திருமதி. H.M.B. கல்யாணி - சிரேஷ்ட விரிவுரையாளர், அழகியற்கல்வித் துறை

திரு. S. வர்ணசிங்க - சிரேஷ்ட விரிவுரையாளர், அழகியற்கல்வித் துறை

திருமதி. B.M.S.De. சொய்சா - விரிவுரையாளர், அழகியற்கல்வித் துறை

**வெளிவாரி வளவாளர்கள்**

பேராசிரியர் ஆரியரத்ன கலுஆரச்சி - உப பீடாதிபதி, அழகியல் கலைப் பல்கலைக்கழகம், கொழும்பு 07

சிரேஷ்ட பேராசிரியர். முதியன்சே திசாநாயக்க - அழகியல் கலைப் பல்கலைக்கழகம், கொழும்பு 07

பேராசிரியர். திரு. லயனல் பெத்தரகே - அழகியல் கலைப் பல்கலைக்கழகம், கொழும்பு 07

கலாநிதி திருமதி. ஸ்ரீயானி ராஜபக்ச - அழகியல் கலைப் பல்கலைக்கழகம், கொழும்பு 07

திரு. விக்ரமசிங்ஹ பண்டார - சிரேஷ்ட விரிவுரையாளர், அழகியல் கலைப் பல்கலைக்கழகம், கொழும்பு 07

திரு. அசோக திசாநாயக்க - சிரேஷ்ட விரிவுரையாளர், அழகியல் கலைப் பல்கலைக்கழகம், கொழும்பு 07

திரு. குணசேன ராஜபக்ச - சிரேஷ்ட விரிவுரையாளர் (ஓய்வுபெற்ற) கிராகம ஆசிரியர் கல்விக் கல்லூரி

திரு. சிரில் மீகம - சிரேஷ்ட விரிவுரையாளர் (ஓய்வுபெற்ற) கிராகம ஆசிரியர் கல்விக் கல்லூரி

**மொழிச்செம்மையாக்கம்:** பேராசிரியர் வண. மாதுருஓய தம்மிஸ்ஸர தேரர் - சிரேஷ்ட விரிவுரையாளர், களனி பல்கலைக்கழகம்,
விக்கிரம ஆரச்சி ஆயுள்வேத நிலையம், யக்கல

**மொழிபெயர்ப்பு:** திருமதி. யூ. விவேகானந்தன் (ஓய்வுபெற்ற ஆசிரியை) - ஹட்டன் வலயம்